**கரூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை திருமதி.கே.எம்.சுதா**

ந.க.எண்.16/2026/எப்1 நாள்.05.02.2026

பொருள் : மனைப்பிரிவு – கரூர் மாநகராட்சி – சணப்பிரட்டி கிராமத்தில் 1)திருமதி.கமலம், 2)திருமதி.நிர்மலா, 3)திருமதி.கோகிலா மற்றும் 4)திருமதி.ரேவதி ஆகியோருக்கு சொந்தமான வார்டு–2, பிளாக்–34, நகரளவு எண்.2091/2 மற்றும் சணப்பிரட்டி கிராமம் நில அளவை எண்கள் 1222 மற்றும் 1223–ல் 0.84 ஏக்கர் (3390.00 ச.மீ) பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக

பார்வை : 1)அரசாணை எண்.141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022
2)நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி2 நாள்.20.10.2022.
3)உதவி இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், கரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.RNVW14GY/2024/TCP நாள்.24.12.2024.
4)M.Kumarasamy College of Engineering, Karur அவர்களின் கடிதம் MKCE/CE/2025-26/TPI-10, நாள்.04.11.2025
5)கரூர் மாமன்ற தீர்மானம் எண்.2863, நாள்.12.12.2025.

-------

**உத்திரவு:**

பார்வை 3–ல் காணும் உதவி இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், கரூர் அவர்களின் கடிதத்தில் கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சணப்பிரட்டி கிராமத்தில் 1)திருமதி.கமலம், 2)திருமதி.நிர்மலா, 3)திருமதி.கோகிலா மற்றும் 4)திருமதி.ரேவதி ஆகியோருக்கு சொந்தமான வார்டு–2, பிளாக்–34, நகரளவு எண்.2091/2 மற்றும் சணப்பிரட்டி கிராமம் நில அளவை எண்கள் 1222 மற்றும் 1223–ல் 0.84 ஏக்கர் (3390.00 ச.மீ) பரப்பளவுள்ள மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பொது இடங்களை மாநகராட்சி ஆணையர் பெயரில் 09.12.2024–ல் பத்திரபதிவு எண்.2627/2024–ல் தானபத்திரமாக பெற்றுக்கொண்டு மனைப்பிரிவிற்கு ம.வ/மா.ந.ஊ.அ(க.மா) எண்.190/2024 (இணையதள ஒப்புதல்) என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்களின் 10.11.2025–ம் தேதிய குறிப்பில் மனைப்பிரிவிற்கான தார் சாலைகள், வடிகால் வசதி, குடிநீர் பகிர்மான குழாய்கள், தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு உள்ளது என தெரிவித்துள்ளதினை தொடர்ந்து பார்வை 5ல் காணும் இம்மாமன்ற தீர்மானத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

**இணைப்பு:**

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
மற்றும் நிபந்தனைகள்

(ஒம்) கே.எம்.சுதா,
ஆணையாளர்,

பெறுதல்,

1) திருமதி.கமலம் , 2) திருமதி.நிர்மலா
3) திருமதி.கோகிலா, 4) திருமதி.ரேவதி
கதவு எண்.56/45.தெற்கு தெரு,
பசுபதிபாளையம், சணப்பிரட்டி, கரூர்.

**நகல்:**

1. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கரூர்.
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை, கரூர்.
3. வருவாய் அலுவலர், கரூர் மாநகராட்சி.
4. வட்டாட்சியர், கரூர்.

//உண்மை நகல் உத்தரவுப்படி//

P. R 5/2/26

செயற்பொறியாளர் (திட்டம்)
கரூர் மாநகராட்சி

05.02.2026